1981 பிப்ரவரி 2]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : அதற்கென்று சரியான அமைப்பு ஒன்றை வைத்துக்கொண்டு எந்த ஸ்டேடியத்தில் விளையாட்டை நடத்துவது என்பதை அவர்களே நிர்ணயிக்கிறார்கள். அதற்கும் அரசுக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை.

திரு. மி. வின்செண்ட்: கிரிக்கெட் விளையாட்டில் மிகவும் ஆர்வமுள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு காம்ப்ளிமென்டரி டிக்கட் அல்லது கன்செஷன் டிக்கட் கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளில் இந்த நாட்டு மக்கள் எல்லோரும் சமமாகத்தான் கருதப்படுவார்கள்.

திரு. எம். எஸ். மாணிக்கம் : கிரிக்கெட் விளையாட்டுகளில் எல்லோருமே கலந்து கொள்கிற நிலைமை இருக்கிறது. அமைச்சர் அவர்கள் அதற்கு வரி விதித்தது பற்றி ஆலோசிக்கப்படும் என்று குறிப்பிட்டுள்ளார்கள். கிரிக்கெட் விளையாட்டை மேலும் அபிவிருத்தி செய்ய, ஊக்கமூட்ட அந்தவரி விதிப்பை விதிக்காமல் இருக்க அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா? அப்படி விதிக்க வேண்டுமென்றாலும் டெஸ்ட் பந்தயங்களுக்கு மட்டுமே அந்த வரியை விதிக்க அரசு கருதுமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : அரசு யோசனை செய்யும்.

திரு. ஆர். மணிமாறன் : பாராளுமன்றத்தில் கிரிக்கெட்டுக்கு என்று தனியாக டீம் அமைக்கப்பட்டிருக்கிறது. சட்ட மன்ற உறுப்பினர்களைக்கொண்டு அத்தகைய கிரிக்கெட் டீம் அமைக்கப்படுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைத்தால் நல்லது.

குடும்பக் கட்டுப்பாடு போன்ற கருத்துத் திரைப்—
படங்களுக்கு வரி விலக்கு.

*வினா எண். 142. திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா.—

குடும்பக் கட்டுப்பாடு, தீண்டாமை ஒழிப்பு முதலிய கொள்கைகளைப் பிரசாரம் செய்யக் கூடிய திரைப்படங்களுக்கு வரி விலக்கு அளிக்கப்படுகிறதா ?

[1981 பிப்ரவரி 2

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பொது மக்களுக்கு நல்ல கருத்துக்களை எடுத்துக் காட்டும் படங்களுக்கு வரி விலக்களிக்கக் கோரும் கோரிக்கைகளை அரசு பரிசீலித்து அவைகளின் தகுதியின் அடிப்படையில் கேளிக்கை வரியிலிருந்து விலக்களித்து வருகின்றது.

திரு. வ. சத்தியமூர்த்தி: தலைவர் அவர்களே, தீண்டாமை ஒழிப்பு முதலிய கொள்கைகளை பிரச்சாரம் செய்யக்கூடிய திரைப்படங்களுக்கு வரிவிலக்கு கொடுப்பதற்கு ஆலோசிப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதோடு அந்தப் பிரச்சாரத்தை சிறு குழந்தையிலேயே உணர்வை ஊட்டக்கூடிய முறையிலே பள்ளி மாணவர்களுக்கு கட்டாயமாக அந்தத்திரைப் படங்களை போட்டுக் காட்டுவதற்கு அரசு ஆணை பிறப்பிக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, மக்களுக்கு நல்ல கருத்துக்களை தருகின்ற படங்கள் வியாபார நோக்கத்திலே முதலிலே போய் நட்டம் ஏற்பட்டால் பிறகு அரசுக்கு வருகிறபோது நல்ல கருத்துக்கள் மக்களுக்கு கிடைக்க வேண்டும் என்ற முறையிலே அதற்கு வரியிலிருந்து விலக்கு கொடுக்க வேண்டுமென்று அரசு எண்ணம் கொண்டிருக்கிறது. மற்றவைப் பற்றிச் சொல்கிறார்கள், அதுபற்றி எனக்குத் தெரியாது.

டாக்டர் கே. சமரசம்: தலைவர் அவர்களே, குடும்பக்கட்டுப்பாடு தீண்டாமை ஒழிப்பு, சமூக சீர்திருத்தம் பற்றிப் பிரச்சாரம் செய்யக்கூடிய படங்கள் இதுவரை எத்தனை வெளிவந்திருக்கின்றது. எத்தனை படங்களுக்கு அரசு வரி விலக்கு அளித்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : அப்படிப்பட்ட படங்கள் வியாபார நோக்கத்தோடு எடுக்கப்பட்டு பிறகு நட்டம் வந்தால் தான் அரசுக்கு வரும். அந்த படங்கள் பற்றி அரசுக்கு வந்த பிறகு அரசு அதுபற்றி நடவடிக்கை எடுக்கிறது; அப்படி வந்த படங்கள் இரண்டு, மிருகங்களின் நடவடிக்கைகள் பற்றி கல்வி புகட்டும் திரைப்படம் ஒன்று. இரண்டாவது, அதிசய மிருகங்களும், அற்புத பறவைகளும், என்பது. உலகத்திலே உள்ள காட்டுமிருகங்கள், பறவைகள் பற்றிய படங்கள். இந்த இரண்டுக்கும் தான் அரசு வரிவிலக்கு செய்திருக்கிறது.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, குடும்பக்கட்டுப்பாடு, தீண்டாமை ஒழிப்பு போன்ற கொள்கைகளைப் பிரச்சாரம் படங்கள் என்றால் இனிமேல் ரிலீஸ் ஆகக்கூடிய படங்களா? அல்லது முன்னமேயே எடுக்கப்பட்ட படங்களா? தீண்டாமை ஒழிப்பு பற்றி பிரச்சாரம் செய்யும் தங்க ரத்தினம் படத்திற்கும், குடும்ப கட்டுப்பாடு பற்றி பிரச்சாரம் செய்யும் சர்வர் சுந்தரம் படத்திற்கும் வரிவிலக்கு அளிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: முதலிலேயே நான் சொல்லியிருக்கிறேன். மக்களுக்கு நல்ல கருத்துக்களை புகட்டுகிற எந்தப் படமாக இருந்தாலும் வரியிலிருந்து விலக்கு அளிப்பது பற்றி அரசு யோசனை செய்யும், ஆவன செய்யும்.

திரு. மு. ப. முனுசாமி: குடும்பக்கட்டுப்பாடு, தீண்டாமை ஒழிப்பு பற்றி சொல்கிற காட்சிகள் தவிர மற்ற எந்தக் காட்சிகளும் இல்லாத படங்களை அரசு எடுத்துக்காட்ட முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: அரசு இப்போது படங்களை எடுத்துக்காட்டுவதிலே மக்களுக்கு நன்மை செய்யக் கூடிய முறையிலே குடும்பக்கட்டுப்பாடு பற்றி எடுக்கும் என்று கருதுகிறேன். மற்றவைப் பற்றி என்னிடம் தகவல் இல்லை.

திரு. எல். இளையபெருமாள்: தீண்டாமை ஒழிப்பு படத்தை வியாபார நோக்கத்திலே எடுத்து பெரிய லாபம் சம்பாதித்தவர்கள் அவர்களே தீண்டாமையை விடுவதில்லை என்பது பற்றி அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: அப்படிப்பட்டவைகள் பற்றி எனக்குத் தெரியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன. (குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பட்டிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)

## 2. அறிவிப்பு

### உரிமைப்பிரச்னை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து பேரவை 246-வது விதியின் கீழ் அவை உரிமை மீறல் பற்றி டாக்டர் சமரசம் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். அதை இன்று பேரவையில் திரு. ரகுமான்கான் அவர்கள் இல்லாததால் எடுத்துக் கொள்ள முடியவில்லை எனவே இந்தப் பிரச்சனை பிப்ரவரி 4 ஆம் தேதி யன்று எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் கே. சமரசம்: 6 அவர் பிப்ரவரி 4 ஆம் தேதி அன்று வரவில்லை என்றால்....

மாண்புமிகு பேரவைத்தலைவர்: இன்று வரவில்லை, எடுத்துக் கொலை, அதை 4 ஆம் தேதி அன்று ஆலோசிக்கலாம்.